# உம்ராஃ வழிகாட்டி

தமிழ் التاميلية

## 1 இஹ்ராம்

கிரியையில் நுழைய நிய்யத் வைப்பது

- சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு இஹ்ராமுக்கான மீகாத் எல்லை "அல் ஜுஹ்ஃபா". மக்காவிலிருந்து 186 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.
- மதீனா வாசிகளுக்கு "துல் ஹுலைபா" 420 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.
- ஈராக் நாட்டவர்களுக்கு "தாது இர்க்" 98 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.
- ரியாத் அதனை அண்டிய பிரதேசவாசிகளுக்கு "கர்னுல் மனாசில்" 99 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.
- எமன் வாசிகளுக்கு "யலம்லம்" 99 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

விமானம் மூலம் பயணிப்பவர்கள் அருகிலுள்ள இஹ்ராமுக்கான மீக்காத் எல்லையை கடந்து செல்லும்போது நிய்யத் வைத்துக் கொள்வர்.

## 2 தவாஃப்

ஹஜருல் அஸ்வத் கல்லுக்கு நேராக ஆரம்பித்து ஏழு சுற்றுகளின் பின்னர் அக்கல்லின் இடத்தில் முடிவடையும்

முடிவு
ஆரம்பம்

## 3 முடியுமாயின் "மகாமு இப்ராஹீம்" க்கு பின்னால் தொழுவது

## 4 ஸஃபா, மர்வா

### ஏழு சுற்றுகள்

ஸஃபா. மர்வா இரு மலைகளுக்கிடையில் ஓடுதல். பச்சை நிற அடையாளங்கள் இரண்டுக்கும் இடையில் விரைவாக ஓட வேண்டும். இது ஆண்களுக்கு மாத்திரம் உரியது. அது தவிர்ந்த ஏனைய பகுதியில் நடந்து செல்லலாம்.

ஸஃபா

மர்வா

## 5 முடியை குறைத்தல் அல்லது மழித்தல்

முடியை குறைத்தல் அல்லது மழித்தல் ஆண்களுக்குரியது. பெண்களை பொறுத்தவரை ஒரு விரல் நுனி அளவு குறைத்துக் கொள்ளலாம்.

## இஹ்ராமில் தடுக்கப்பட்டவை

1. தலை மற்றும் உடலில் உள்ள முடிகளைக் களையக் கூடாது.
2. நகங்களை வெட்டக் கூடாது.
3. நறுமணம் பூசக் கூடாது.
4. தனக்கோ பிறருக்கோ திருமண ஒப்பந்தம் செய்யக்கூடாது.
5. உடலுறவு கொள்ளக் கூடாது.
6. வேட்டையாடுதல் கூடாது.

### இஹ்ராமில் ஆண்களுக்கு மட்டும் தடுக்கப்பட்டவை

1. தைத்த ஆடை, அதாவது முழு ஆடையாகவோ அல்லது பகுதியளவிலோ அணியக் கூடாது.
2. தலையை தொப்பி தலைப்பாகை போன்றவற்றால் மறைக்கக் கூடாது.

### பெண்களுக்கு மட்டும் தடையானவை

1. முகத்தை நிகாப் புர்க்கா போன்றவற்றால் மறைப்பது. ஆனால் அந்நிய ஆடவர்கள் வரும்போது முகத்தை மறைத்துக் கொள்ளலாம்.
2. கையுறைகள் அணிதல்.

## உம்ராவின் சுன்னத்துக்கள்:

1. நகங்களை வெட்டுதல். நிய்யத் வைப்பதற்கு முன் அகற்ற வேண்டிய முடிகளை அகற்றிக் கொள்ளல்.
2. இஹ்ராமுக்காக குளித்தல்.
3. ஆடைகள் அன்றி உடம்புக்கு மட்டும் மனம் பூசிக் கொள்வது.
4. ஆண்கள் வெண்ணிற வேஷ்டி அணிந்து, துண்டை மேனியில் போர்த்திக் கொள்வது.
5. தல்பியா: "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக், லப்பைக லாஷரீக லக லப்பைக் இன்னல் ஹம்த வன்நிஃமத லக வல் முல்க் லாஷரீக லக்."
6. தவாஃபின் போது அங்கியின் நடுப்பகுதியை வலது அக்குளுக்கு கீழ் சுற்றிக்கொண்டு வந்து இரு ஓரங்களையும் இடது தோள் புஜத்தின் மீது போட்டுக் கொள்ள வேண்டும், வலது தோள் புஜம் மட்டும் திறந்திருக்க வேண்டும்.
7. ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல்.
8. முதல் மூன்று சுற்றுக்களில் சற்று விரைவாக நடத்தல்.
9. "மகாமு இப்ராஹிம்" க்கு பின்னால் இரண்டு ரகஅத்கள் தொழுவது.